# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.903/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW7/ PW-6 <br> Name : செங்குட்டுவன், உதவி ஆய்வாளர் <br> Father's/Husband's Name : அர்ஜூனன் <br> Nationality : Indian | <br> Village: <br> Age :44 <br> Taluk : <br> <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 26-11-2025.**

**எதிரி ஆஜர்.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தஞ்சாவவூர் சிறப்பு நுன்னறிவு பிரிவில் உதவி ஆய்வாளராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 07-02-2018 ம் தேதி 15.00 மணியளவில் நான் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது ஆடுதுரை காளியம்மன்கோவில் தெருவை சேர்ந்த கல்யாணம் மகன் செந்தில் என்பவ் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று விசாணை செய்து சம்பவம் உண்மை என்பதால் எதிரிக்கு எதிராக திருவிடைமருதுர் காவல் நிலைய குற்ற எண் 24-2018 சட்டபிரிவுகள் 294(பி), 324, 506(2) இ.த.ச-வின் கீழ் வழக்கு பதிவு செய்து அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (**மேற்படி கணிணி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 07.02.2018 ம்

தேதி மாலை 16 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் இஸ்மாயில் மற்றும் மூவேந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ( **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் செந்தில், கல்யாணசுந்தரம், மாரிமுத்து ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து, உரிய பிணையில் வெளிவந்தது தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. நான் பணிமாறுதலில் சென்றதால் உதவி ஆய்வாளாரிடம் மேற்படி விவரம் கூறி வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 னிடமிருந்து புகார் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**